வவுனியாப் பல்கலைக்கழகம் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 தொடக்கம் 2023 ஆண்டு வரையிலான காலப்பகுதிவரை AHEAD திட்டத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 25,173,383 பெறுமதியான நடைமுறையல்லா சொத்துக்கள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிந்தமையினால் மீளாய்வாண்டிற்குரிய மிகை மற்றும் திரண்ட மிகை முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டுள்ளன. மேலும், குறித்த சொத்துக்களுக்குக்கான திரண்ட	AHEAD திட்டத்திலிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட சொத்துக்கள் பல்கலைக்கழகப் பேரவையின் அனுமதி கிடைத்த பின்னரே கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்படுகின்றன. 2020 முதல் 2023 வரையிலான காலப்பகுதியில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், அந்த சொத்துகளின் உரிமை	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் உரியவாறான கணக்கீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்

	பெறுமானத்தேய்வு ரூபா 3,909,742 பெறுமதியினால் குறைவாகக் கணக்கிடப்பட்டதால், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களது தேறிய பெறுமதி கூடுதலாக காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில், மீளாய்வாண்டின் வருமான மிகை ரூபா 1,566,371 இனாலும், திரண்ட நிதி ரூபா. 2,343,371 இனாலும் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது.	பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்படும் வரை AHEAD திட்டத்திலேயே காணப்பட்டிருந்தது. எனவே, அதிகாரப்பூர்மான முறையில் AHEAD இலிருந்து பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்படும்வரை அவற்றை கணக்கில் பதிவிற்குட்படுத்த முடியாது.	
(ஆ)	2024 டிசம்பர் 31 இல் ரூபா 26,708,241 பெறுமதியான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தபோதிலும், இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இனுடைய பிரிவு 65 இன் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பீட்டிற்கு உட்பட்டிருக்கவில்லை, மேலும் குறித்த சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டமையினால், இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம், மதிப்பீட்டுத் தவறினை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வவுனியா பல்கலைக்கழகத்தின் காணி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்களுக்கு அரசாங்க விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் மீள்மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் குறித்த செயன்முறையானது 2025 டிசம்பர் மாதத்துக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.	-மேற்படி-
(இ)	இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இனுடைய பிரிவு 83 இன் பிரகாரம், சொத்தின் ஒரு பகுதி பிரதியீடு செய்யும்போது, அகற்றப்படும் பகுதியின் பெறுமதியை நீக்கி புதிய பகுதியை சேர்த்தல் வேண்டும். புதிதாக சேர்க்கப்பட்ட அச்சொத்தின் பகுதி ரூபா. 3,500,000 சொத்தின் பெறுமதியுடன் சேர்க்கப்பட்ட போதும் அகற்றப்பட்ட பகுதியின் பெறுமதியானது நீக்கப்பட்டிருக்காமையானது அவதானிக்கப்பட்டது.	ஒவ்வொரு சொத்தும் தனிப்பட்ட சொத்துக் குறியீடு கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டுப் பெறுமதியுடன் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, குறிப்பிட்ட வாகனத்தின் மறுசீரமைப்பு செய்யப்படும் நேரத்தில் மாற்றப்பட்ட பகுதியின் பெறுமதியை கணிப்பீடு செய்ய முடியவில்லை. மீள்மதிப்பீட்டு செயல்முறை முடிவடைந்ததும், அதற்கேற்றவாறு கணக்குகளில் சரிசெய்யப்படும்.	-மேற்படி-
(ஈ)	இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இனுடைய பிரிவு 69 இன் பிரகாரம், சொத்தின் பெறுமதியானது அதனை பயன்படுத்த தொடங்கியதிலிருந்து கணக்கீட்டிற்கு உட்படுத்தப்படல் வேண்டும். அதன் பிரகாரம், பல்கலைக்கழக நூலகக் கட்டிடத்தின் தரைத் தளம் ரூபா 152,382,569 பெறுமதியில் 2023 ஜனவரியில் பயன்படுத்துவதற்காக கையளிக்கப்பட்டதுடன், அதன் பின்னர் கட்டிடத்தின் முதல் தளமானது, ரூபா 91,387,507 பெறுமதியில் 2024 நவம்பர் மாதம் கையளிக்கப்பட்டது. அத்துடன் 2024 டிசம்பர் 31 ஆந் திகதி கட்டிடத்தின் மொத்த பெறுமதி ரூபா	குறித்த கட்டிடத்திற்குரிய முடிவுறுத்தல் சான்றிதழ் 2024 டிசம்பர் 31 ஆந் திகதி வரை வழங்கப்பட்டிருக்காமையினால் குறித்த செலவுகள் இன்னும் மூலதன நடைமுறை வேலையாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த கட்டிடம் பல்கலைக்கழகத்தினால் பகுதியளவில் பயன்படுத்தப்பட்டு வந்தபோதிலும் குறித்த வேலைத்திட்டம் 2024 நவம்பர் 20 ஆந் திகதியன்று பெரும்பாலும் நிறைவுற்றிருந்தது. கட்டிடத்தை ஒப்படைக்கும் போது	-மேற்படி-

	243,770,076 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், குறித்த கட்டிடத்தின் 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்கான பெறுமானத்தேய்வு ரூபா 7,238,172 மற்றும் ரூபா 8,108,041 ஆகியவை முறையே நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காமையினால் திரண்ட நிதி மற்றும் மீளாய்வாண்டிக்கான மிகை குறித்த தொகையினால் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது.	சொத்துக்களது உரிய வகைப்படுத்தலுக்கேற்ப பட்டியல் விவரம் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே, குறித்த கட்டிடம் 2024 ஆம் ஆண்டின் வருட இறுதியில் மூலதனச் சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	
(உ)	2024 டிசம்பர் மாதத்தில் ரூபா 29,994,054 பெறுமதியான பொருட்களுக்கான கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட போதிலும், குறித்த பொருட்களானது 2025 ஜனவரி முதல் மார்ச் மாத காலப்பகுதியில் கிடைக்கப்பெற்றமையினால், மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களில் குறித்த பெறுமதியானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமையானது இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 01 இனுடைய பிரிவு 07 மற்றும் இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 08 இனுடைய 19(அ), (ஆ) இற்கு முரணாக காணப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	வவுனியா பல்கலைக்கழகத்திற்கான ஒரேயொரு தொடர்ச்சியான வேலைத்திட்டமாக நூலக கட்டிடம் CESL உடன் 2019 ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகின்றது. கொரோனா தாக்கம், நிதி நெருக்கடி, நாட்டில் நிலவிய மூலப்பொருட்களின் தட்டுப்பாடு, இறக்குமதி கட்டுப்பாடுகள், மூலதனக் கட்டுநிதியின் குறைவு மற்றும் ஒப்பந்தகாரர்களின் செயல்திறனற்ற தன்மை காரணமாக குறித்த வேலைத்திட்டம் நீண்டகாலம் செயற்படுத்தப்பட்டமையினால், ஆண்டின் பிற்பகுதியிலேயே உரிய பெறுகை நடைமுறைகளை மேற்கொண்டு வழங்குநர்களிற்கு கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப்பட்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டது. சில பொருட்கள் அவர்களினால் வழங்கப்பட்ட போதிலும், கொடுப்பனவுச் செயல்முறையின் போது குறித்த பொருட்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. குறித்த வேலைத்திட்டம் நீண்டகாலத்திற்கு செயற்படுத்தப்பட்டமையினால், வவுனியா பல்கலைக்கழகம் 2024 ஆண்டிற்குள் இதனை முடிவுறுத்த வேண்டிய கடப்பாடு இருந்தமையினால் அதனை பொறுப்புகளாக வெளிப்படுத்தப்பட்டு, தொடர்ந்து வரும் ஆண்டில் உரிய கொடுப்பனவு செலுத்தப்பட்டது.	-மேற்படி-

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஆம் ஆண்டு டிசம்பரில் ரூபா 755,425 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட டிஜிட்டல் வரைபட மென்பொருளானது அருவச் சொத்துகளுக்கு பதிலாக வியாபார மற்றும் ஏனைய வருமதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லா சொத்துகள் குறைவாகவும், நடைமுறைச் சொத்துகள் கூடுதலாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.	குறித்த டிஜிட்டல் வரைபடம் பல்கலைக்கழக ஆய்வு மானியத் தொகையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டமையினால், இதனை நடைமுறைச் சொத்தாக ஆய்வாளரிடமிருந்து பெறவேண்டிய வருமதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த ஆய்வு நடவடிக்கைகள் முடிவடைந்ததுடன் குறித்த பெறுமதியை தொடர்புடைய திணைக்களத்தின் கீழ் மூலதனமாக வெளிப்படுத்தப்படும்.	மென்பொருள், பயன்பாட்டிற்குத் தயாராக காணப்படுகின்ற நிலையின் போது மாத்திரமே நடைமுறையல்லா சொத்துகளின் கீழ் கணக்கிடப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் ரூபா 6,602,525 பிணைமுறி ரூபா.4,399,778 முதலீட்டிற்குரிய வட்டி மற்றும் பிணைமுறி உடன்படிக்கைகளின் மீறலுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா. பெறுமதியானது கணக்குகளில் உரியவாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை	பிணைமுறிக்குரிய முதலீட்டு வட்டி குறிப்பிட்ட பயன்பாட்டிற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும், மேலும் திரண்ட வட்டிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்ட உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை 04/2019 இற்கு அமைவாக மீள்முதலீடு செய்யப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டிலிருந்தான திரண்ட மூலதனமும் வட்டியும் ரூபா. 49,173,656 ஆகும். மேலும் இவ் வெளிப்படுத்தல்களானது இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வவுனியா பல்கலைக்கழக பேரவையானது தனது 39வது கூட்டத்தில் ரூபா 4,399,778.21 இனை அமைச்சரவையின் தீர்மானம் வரும் வரை மீளப்பெற்றுக்கொள்ளும் செயல்முறையை நிறுத்திவைக்க தீர்மானித்துள்ளது.	வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு தொடர்புடைய வட்டி வருமானம் குறித்த நிதியாண்டிற்கே வெளிப்படுத்தப்படல் வேண்டும் மற்றும் பிணைமுறி உடன்படிக்கை மீறல்கள் உடன்படிக்கைக்கு அமைவாக நிதிக்கூற்றுக்களில் வருமதியாக வெளிப்படுத்துதல் வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டியவைகள்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
பிணைமுறி உடன்படிக்கை மீறப்பட்டமைக்கான	விரிவுரையாளர் திருமதி. துஷ்யந்தி லவன், – 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான மீதி ரூபா 14,463,009.86 சரியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சட்ட	நிலுவைத் தொகைகளை அறவிடுவதற்கு

கூட்டுமொத்தம் ரூபா 15,057,433 தொகையானது, 01 தொடக்கம் 02 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.	மா அதிபர் திணைக்களத்தின் மூலம் பல்கலைக்கழகத்தினால் உரிய சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த மீதியினை அறவிடும் செயல்முறையும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. Dr திருமதி. எச்.கே.என் சஞ்சீவனி என்பவரிடமிருந்து பெற வேண்டிய மீதி ரூபா. 926,067.82 பெறுமதியானது ஓய்வூதிய பங்களிப்பிலிருந்து அறவிடுவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது அனுமதிக்காக எதிர்பார்க்கப்படுகின்றது. இயற்பியல் துறை விரிவுரையாளர் திருமதி. ஏ.வி. ஆன் சிந்துஷா (தகுதிகாண்காலம்) என்பவரின் மொத்த பிணைத் தொகை ரூபா 4,399,778.21 வவுனியா பல்கலைக்கழகப் பேரவை தனது 39 வது கூட்டத்தில், அமைச்சரவைத் தீர்மானம் வரும் வரை மீளப்பெற்றுக்கொள்ளும் நடைமுறையை நிறுத்திவைக்க தீர்மானித்துள்ளது.	உரியவாறான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத்தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 11 மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2019 ஜூலை 29 ஆந் திகதிய உள்ளகக் கணக்காய்வு சுற்றறிக்கை இல. 04/2019	மீளாய்வாண்டிக்குரிய காலப்பகுதியில் ரூபா 49,173,656 பெறுமதியிலான நிலையான வைப்பு முதலீடுகளுக்கு, உரிய அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரின் அனுமதி பெறப்படவில்லை.	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை இல. 02/2019 இன் பிரகாரம், அனைத்து குறுகிய கால முதலீடுகளும் ஆளுகைக்குரிய பேரவையின் அனுமதிக்கு உட்பட்டவை. பல்கலைக்கழக, பேரவையின் அனுமதியுடன் அரசாங்க வங்கிகளில் நிலையான வைப்பு முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	சட்டத் தேவைப்பாடுகளுக்கு அமைவாக, குறித்த முதலீட்டிற்கு உரியவாறான அனுமதி பெறப்பட வேண்டும்.
(ஆ)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XX இன் பிரிவு 3.1 மற்றும் பல்கலைக்கழக	153 கல்விசார் பணியாளர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லுகையினை முறையாக	அனைத்து அரச பல்கலைக்கழக முறைமையிலும் கல்விசார் பணியாளர்கள் கைவிரலடையாளத்தை உறுதிப்படுத்தும் இயந்திரம் அல்லது உரிய வருகைப்	கல்விசார் பணியாளர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லுகையினை கைவிரலடையாள

	மானியங்கள் ஆணைக்குழுவின் 2017 ஜூலை 10 ஆந் திகதிய சுற்றறிக்கை இல. 10/2017	உறுதிப்படுத்தாமல், 2024 ஆம் ஆண்டில் ரூபா 348,044,405 சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளது.	பதிவேட்டின் மூலம் வருகையை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயமில்லை என்பது பொதுவான நடைமுறையாக உள்ளது.	த்தை உறுதிப்படுத்தும் இயந்திரம் மூலம் பதிவுசெய்யப்பட வேண்டும்.
(இ)	2023 ஜனவரி 18 ஆந் தேதியிடப்பட்ட, கல்வி அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கை இல. BD/126/214/19/2023 இன் பிரிவு 5	பிணைமுறி உடன்படிக்கையை மீறியவர்களிடமிருந்து மீள அறவிடப்பட்ட ரூபா 8,551,518 பெறுமதியான தொகையானது, திறைசேரிக்கு செலுத்தப்படவில்லை.	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 737 இன் பிரகாரம், பிணைமுறி மீறல் நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியினை பயன்படுத்தும் விதம் குறிப்பிடப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் தேவைக்கேற்ப, குறித்த நிதி திறைசேரிக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுப் விளைவுகள் ரூபா 91,763,619 மிகையாக காணப்படுவதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா. 77,270,408 ஆகும். அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 14,493,211 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கான காரணங்களாக மீண்டெழும் மானியம் அதிகரித்தல், மூலதன மானியம் அதிகரித்தல், மற்றும் பரிமாற்றமற்ற பரிசுகளும் நன்கொடைகளும் அதிகரித்தல் ஆகியவற்றினை எடுத்துக்காட்டலாம்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2018/2019 கல்வியாண்டில் இணைத்துக் கொள்ளப்பட்ட 499 மாணவர்களில், பரீட்சைகளில் சித்தியடையாததன் காரணமாக விலகியவர்கள் 38 மாணவர்கள் உட்பட மொத்தம் 77 மாணவர்கள் தங்கள் பாடத்திட்டங்களை முழுமையாக நிறைவு செய்யாமல் இடைநடுவே விலகியுள்ளனர்.	2018/2019 கல்வியாண்டில் உண்மையில் கைவிட்ட மாணவர்கள் எண்ணிக்கை 30 ஆகும். 30 பேர்களில் ஐந்து மாணவர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக தங்களது பதிவை இரத்து செய்துள்ளனர். மீதமுள்ள 25 மாணவர்கள், முதலாமாண்டு முதல் பாடத்திட்டத்தை தொடரத் தவறியுள்ளனர், மேலும் அதற்கான உரிய தகவல்களும் வழங்கப்படவில்லை. பீடத்தின் மட்டத்தில், மாணவர்கள் விலகல் மற்றும் பரீட்சைகளில் சித்தியடையாததற்க்கான காரணங்களை இனம்காண்பதற்காக பீடாதிபதிகள் ஒரு முறையான பொறிமுறையை செயற்படுத்தும்	பட்டப்படிப்பு பாடத்திட்டத்தை கைவிடும் விகிதத்தை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

		பணியில் உள்ளனர். இந்த பொறிமுறையில், ஒழுங்குபடுத்தப்பட்ட கருத்துக்களை சேகரித்தல், மாணவர் ஆலோசனை, மற்றும் கல்விசார் முன்னேற்றத்தை வழக்கமாக கண்காணித்தல் ஆகியவை உள்ளடங்கும். இந்த பொறிமுறையின் மூலம் கிடைக்கப் பெறுகின்ற அவதானிப்பின் அடிப்படையில், எதிர்காலத்தில் மாணவர் விலகல் மற்றும் சித்தியடையாமை விகிதங்களை குறைக்க, பொருத்தமான தலையீடுகள் மற்றும் உதவும் முறைகள் அமுல்படுத்தப்படவுள்ளன.	
(ஆ)	பல்கலைக்கழகத்தின் இரண்டு பீடங்களில் 2021/2022 முதல் 2023/2024 இரண்டாம் அரையாண்டு வரை, 205 விரிவுரையாளர்களுக்கு 228 பாடங்களை கற்பிப்பதற்காக 8,415 மணித்தியாலங்கள் விரிவுரைக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. எனினும், அவற்றில் 2,916 மணித்தியாலங்கள் அதாவது ஒதுக்கப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் 35% ஆனவை நடாத்தப்படவில்லை. இதன் விளைவாக, மாணவர்களுக்கு பூரணமான அறிவு வழங்கப்பட்டிருக்க வில்லை.	திணைக்களத்தின் கணக்காய்வு உதவியாளர் சேகரித்த தகவல் வருகைப் பதிவேட்டின் அடிப்படையில் அமைந்தது. ஆனால் தொழில்துறை பயிற்சி, ஆராய்ச்சி செயல்திட்டங்கள் மற்றும் Zoom வகுப்புகளில் ஈடுபட்ட மாணவர்களுக்கான வருகைப் பதிவேடுகள் பெறப்படவில்லை. நிர்வாக முறைமை முறையாக்கப்படும் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு வருகைப் பதிவுகளை சரிவர பராமரிக்கவும், வருகை தொடர்பான ஆவணங்களை அடிக்கடி பராமரிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.	ஒதுக்கப்பட்ட விரிவுரை நேரங்களில் உரிய கல்விசார் பணியாளர்களால் விரிவுரைகள் நடாத்தப்படல் வேண்டும், மேலும் செயல்திறனை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமான ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	AHEAD திட்டத்தின் மூலம் பெறப்பட்ட ரூபா 17,732,101 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் 1 முதல் 4 ஆண்டுகள் வரை பயன்படுத்தப்படாமல் உள்ளன.	1.நீர்வாழ் உயிரினங்களை வளர்க்கும் தொட்டியின் நிர்மானம் மற்றும் பராமரிப்பு உள்ளக அலகு சீராக செயல்படுகின்றதுடன் வெளியக முறைமையை சீர்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2.தயிர் உற்பத்தி அலகுகளின் நிர்மானம் தேவைப்பாடுகளுக்கும் கோரிக்கைகளுக்கும் ஏற்ப உற்பத்தி அலகுகளில் தயிர் உற்பத்தி செய்யப்படுகின்றது. தொடர்புடைய பாடத்திட்டங்களின் பகுதியாக தயிர் உற்பத்தி தொடர்பான பாடங்கள் நடாத்தப்படுகின்றன. பயன்தரும் நுண்ணுயிர்கள், தேன்	சொத்துகளை குறித்த நோக்கங்களுக்காக வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் அத்துடன் குறித்த சொத்துக்களின் பயன்பாட்டை மதிப்பீடு செய்வதற்குரிய ஆவணங்கள்

உற்பத்திகள் மற்றும் நன்னாரி சேர்த்து ஆகியவற்றை தயிர் உருவாக்கத்தின் அபிவிருத்தியினை மையமாகக் கொண்டு ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன. அதில் சில ஆராய்ச்சி திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்படுகின்றது.

முறையாக பராமரிக்கப்படல் வேண்டும்.

3.கட்டமைக்கப்பட்ட ஈர நிலத்தின் நிர்மானம்

எதிர்காலத்தில் இது ஆராய்ச்சி நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படலாம் என்பதுடன் இது தற்போது தொடர்ச்சியாக செயல்பட்டு வருகிறது. இதன் செயல்பாடுகளை மாணவர்களின் செயன்முறை அறிக்கைகள் மூலமும் கண்காணிக்கப்படுகிறது.

4.காளான் வளர்ப்பதற்கான குடிசை கட்டுமானம்.

சுய தொழில்வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்காக இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு உற்பத்தி நுட்பங்களை பற்றி கற்றுக் கொள்ளவும் அவர்களை மேம்படுத்தும் வகையிலும் பயிற்சிகளை வழங்குவதற்காகவும் காளான்கள் வளர்க்கப்படுகின்றன. மாணவர்கள் தங்களது ஆராய்ச்சியில் காளான் வளர்ச்சிக்கான அடிப்படைப் பொருளின் பயன்பாட்டை ஆய்வு செய்தனர். அனைத்து பயிற்சி நடவடிக்கைகளும் இங்கேயே நடைபெறுகின்றன.

5.சைலேஜ் தயாரிப்பிற்கான குடிசை கட்டுமானம்

இத்தளவமைப்பு தொடர்ச்சியாக இயங்காதபோதிலும், நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி திட்டங்களுக்காக தேவையான அளவு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், இதனைப் பயன்படுத்தி சில பட்டப்படிப்பு ஆராய்ச்சி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிடப்பட்ட அலகுகளுக்கான உபகரணங்கள் குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

தட்டு தயாரித்தல் அலகு தொடர்பான இயந்திரங்கள் தற்பொழுது பழுதடைந்த நிலையில் உள்ளன சம்பந்தப்பட்ட நிறுவனத்தினால் உரியவாறான பழுதுபார்க்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

3.3 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
குறிப்பிட்ட காலத்திற்குள் பொருட்களை வழங்க தவறிய வழங்குநர்களிடமிருந்து ரூபா. 1,200,123 பெறுமதியான ஒப்பந்த காலதாமத கட்டணங்கள் முறையாக அறவிடப்பட்டிருக்கவில்லை.	பொருட்கள் உரிய நேரத்திற்குள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் சில திருத்தங்கள், பொருத்துதல், மற்றும் பொருட்களை அனுப்பி வைக்கும் முறையில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக, இந்த காலதாமதங்கள் ஏற்பட்டது. இதனால், இந்த காலதாமதங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தமையினால் உரிய ஒப்பந்த காலதாமத கட்டணங்கள் அறவிடப்படவில்லை.	விலைமனுக்கோரல் ஆவணங்களின் பிரகாரம் உரிய ஒப்பந்த காலதாமத கட்டணங்கள் அறவிடப்படல் வேண்டும்.

3.4 மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
2024 டிசம்பர் 31 ஆந் திகதியின் பிரகாரம், வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணி பிரிவுகளில் உள்ள 137 ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2024 டிசம்பர் 31 ஆந் திகதியின் பிரகாரம், வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணி பிரிவுகளில் 137 வெற்றிடங்கள் உள்ளன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2022 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய நிதிச் சுற்றறிக்கை இல. 07/2022 இன் பிரகாரம், பொருளாதார நெருக்கடியின் காரணமாக அனைத்து ஆட்சேர்ப்புகளும் நிறுத்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழகம் தேவையான ஆளணி இல்லாமல் எதிர்கொள்ளும் சிரமங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முன்பே தெரிவித்துள்ளதுடன் உரிய அனைத்து ஆளணி வெற்றிடங்களையும் நிரப்புவது தொடர்பான அனுமதிக்காக எதிர்பார்க்கப்படுகின்றது.	அனுமதியளிக்கப்பட்ட ஆளணியினை முழுமையாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.